DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No. 112 /15

Deposition of LW 11/ PW 7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஆனந்த்ராஜ் | Caste | : | |
| Father's Name | : | கணேசன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

( 1 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 04.12.2023.

முதல் விசாரணை

1) நான் தற்போது சென்னையில் குடியிருந்து வருகிறேன். முன்பு வெள்ளி திருப்பூரில் குடியிருந்து வந்தேன். மின்வாரியத்தில் பணிபுரிந்து வருகிறேன்.

2) சதீஷ்குமார், வினோத்குமார், அலாவூதின், ராம்கி, விஜய் ஆகியோரை எனக்குத் தெரியாது. கௌதமை எனக்குத் தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161 ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை:

குறுக்கு விசாரணை:

1) எனக்கு பவானி ஸ்டேட் பேங்கில் வங்கிக் கணக்கு இருந்து அதற்காக ATM கார்டு பெற்றிருந்தேனா என்றால் ஆமாம். நான் கௌதமுடன் சுற்றுலா சென்றிருந்தேனா என்றால் ஆமாம். கௌதம் எனக்கு ராம்கியை அறிமுகப்படுத்தினாரா என்றால் இல்லை. ராம்கி என்னுடன் நண்பராகிவிட்டார் என்றால் யாரென்றே தெரியாது. ராம்கி பெரிய அளவில் தொழில் செய்வதாகவும், அதில் பெரிய தொகை வருவதாகவும், அவ்வளவு தொகை பணபரிமாற்றம் செய்தால் சிக்கல் வரும் என்பதால் பணபரிவர்த்தனைக்காக

என்னுடைய ஏடிஎம் கார்டு மற்றும் தெரிந்தவர்கள் ஏடிஎம் கார்டும் வாங்கிக் கொடுத்தாள் பணம் தருவார்கள் என்றால் இல்லை. நான் மாதேஸ்வரனின் ஏடிஎம் கார்டை அவரது மகன் ஜீவானந்தம் மூலம் வாங்கிக் கொடுத்தேன் என்றால் இல்லை. ஒருவாரத்தில் ஏடிஎம் கார்டை திருப்பிக் கொடுக்கிறேன் என்றால் இல்லை. அதற்காக நான் முன்பணமாக 1500/- வாங்கி செலவு செய்துவிட்டேன் என்றால் அவர் யாரென்றே எனக்குத் தெரியாது. அதன்பிறகு தான் ராம்கி மோசடி செய்தது எனக்குத் தெரியவந்தது என்றால் எனக்குத் தெரியாது. ராம்கி, சதீஷ்குமார், வினோத்குமார், அலாவூதின், ஆகியோரும் ஏடிஎம் கார்டு பெற்று ஏமாற்றினார்கள் என்றால் எனக்குத் தெரியாது. எனக்கு ராம்கியை தெரியும் எனவும், ஆனால் தற்போது அவரை தெரியாது எனவும், அவர் செய்த மோசடிகள் தெரியாது எனவும் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை